RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s15

OPEN ACCESS

# குறுந்தொகையில் அகமாந்தர் உறவுநிலை

**மி. கவிதா [அ], தே. மரிய மெர்லின் கவிதா [அ, *]**

[அ] தமிழ்த்துறை, தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), பாளையங்கோட்டை-627002, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.

# Kurunthokail Agamander Uravunilai

**M. Kavitha [a], D. Maria Merlin Kavitha [a, *]**

[a] Department of Tamil, St. Xavier's College (Autonomous), Affiliated to Manonmaniam Sundaranar University, Palayamkottai-627002, Tirunelveli, Tamil Nadu, India.

* Corresponding Author: mariamerlin19997@gmail.com

Received: 10-03-2021
Revised: 04-09-2021
Accepted: 10-09-2021
Published: 24-01-2022

Check for updates

## ABSTRACT

Pattum Thogaiyum are given as Sangam literature. Kuṟunthokai is a classical Tamil poetic work and traditionally the second of the Eight Anthologies (Ettuthokai) in the Sangam literature. The richness of the language and the ability to explain the biology in harmony with the nature of the Sangath Tamil people are great in this Kuruntokai. Love, the most subtle feeling of the human mind, is beautifully and deeply situated in the shorthand. This article summarizes the love relationships that are embedded in the Kuṟuntokai. Although the love of the Hero, the Heroine, the friend, Paangan, the nurse and the narrator is seen in the Kuṟuntokai, more importance is given to the love of the Hero-Heroine. Not only these but also the nature of the prostitutes who are negative members has been studied.

**Keywords:** Pattum Thogaiyum, Kurunthokai, Sangam literature.

## முன்னுரை

சங்ககால மக்கள் கூட்டமாக நல்ல உறவுநிலைகளோடு வாழ்ந்து வந்திருக்கின்றனர். அவர்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டுவதாகச் சங்க இலக்கியங்களான பாட்டும், தொகையும் தோன்றின. அத்தகைய எட்டுத்தொகை நூலில் ஆறு அகநூல்கள் உள்ளன. அவற்றின் ஒன்றாக விளங்கும் குறுந்தொகையில் உள்ள அகமாந்தர்கள் பற்றியும் அவர்களுக்கு இடையேயான உறவுநிலைகளைப் பற்றியும் இக்கட்டுரை வழியாகக் காணலாம்.

## அகமாந்தர்

சங்ககால மக்களின் வாழ்க்கையை அகம், புறம் என இரு வகையாகப் பிரிக்கலாம். அவற்றில் அகவாழ்க்கையில் முக்கியப் பங்கினைச் சிலர் பெறுவர். அவர்கள் அகமாந்தர் என அழைக்கப்படுவர். முக்கியமாகத் தலைவன், தலைவி, தோழி, பாங்கன், செவிலி ஆகியோரின் கூற்றுக்கள் அதிகம் காணப்படும். அவர்களே அகமாந்தர்கள் ஆவர். அவர்களுக்கு இடையேயான உணர்வுப்பூர்வமான சில உறவுநிலைகளும் காணப்படுகின்றன.

## தலைவனின் உறவுநிலை

அக இலக்கியங்கள் காட்டும் தலைவன் பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சும் தன்மையுடையவனாகவும் அறிவுடையவனாகவும் இருக்கிறான் என இலக்கணம் காட்டும் தொல்காப்பியர்,

"பெருமையும் உரனும் ஆடுஉ மேன"

என்கிறார் (Ilampooranar, 1967).

இதே நோக்கில் தான் குறுந்தொகையில் விளங்கும் தலைவன் எந்தச் செயலைச் செய்தாலும் திறமையாகவும், செம்மையாகவும் செய்கின்ற தன்மையைப் பெற்றிருக்கிறான். இதனால்தான் அவன் தன் தலைவியிடம் கொண்டிருக்கும் காதல் உண்மையானதாகவும் உறுதியானதாகவும் விளங்குகின்றனது எனலாம். குறுந்தொகையில் காணப்படும் தலைவன், தலைவியின்பால் அன்பு கொண்டு அவளது இன்ப வாழ்க்கையில் பங்கேற்று சிறந்த வாழ்க்கை வரன்முறைகளை உலகிற்குக் காட்டுபவனாக தலைவன் விளங்குகிறான்.

"வினையே ஆடவர்க்கு உயிரே"

என்று தோழியின் கூற்றாக அமையும் குறுந்தொகைப் பாடலில் தலைவனுக்கு வினையே உயிர் போன்றதாயின் அத்தகைய வினைக்கும் மாண்புற்ற கற்புடைய தலைவியே காரணம் எனலாம் (Swaminatha Iyer, 1983).

## தலைவி உறவுநிலை

அகத்திணை மாந்தர்களில் பெரிதும் மதிப்புடையவளாகத் தலைவி விளங்குகின்றாள். அகத்திணை மாந்தர்களுள் குறை ஒன்றும் இல்லாதவளாகவும், பெருமை உடையவளாகவும் தலைவி படைக்கப்பட்டிருக்கிறாள். தலைவியே தலைவனுடன் துணைநிற்கும் முதன்மைக் கருவியாக விளங்குகிறாள். இத்தலைவி தன் மனவுணர்வுகளைத் தலைவனிடம் வெளிப்படுத்த இயலாத இடங்களில் அவளுக்கு உற்ற துணையாகத் தோழி படைக்கப்பட்டிருக்கிறாள். தலைவன் பொருள்வயின் பிரியும் நிலையில் தலைவியின் மனம் நொந்து விடுகின்றது. வினை ஆடவர்க்கு உயிராதல் போல, மனையில் வாழும் மகளிர்க்கு ஆடவர் உயிராக விளங்கும் தன்மையை,

"மனையுறை மகளிர்க்கு ஆடவர்தாம் உயிர்"

என அகஇலக்கியம் காட்டுகின்ற பான்மையை உணர முடிகின்றது (Swaminatha Iyer, 1983).

தலைவன், களவு வாழ்க்கையை நீடித்தலின் பொருட்டுச் சிறைப்புறமாக வந்து நிற்கின்றான். தோழி, தலைவியிடம் தலைவன் விரைவில் மணம் செய்து கொள்வதற்காகத் தலைவன் இயல்பினையும் நட்பினையும் பழிந்துரைக்கிறாள். அது கேட்ட தலைவி, தோழியிடம் தன் தலைவனின் நட்பின் தன்மையை உணர்த்துகிறாள்.

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று

நீரினும் ஆரளவ வின்றே சாரல்

கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு

பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"

என்று தலைவி புகழ்வது தலைவன் எவ்வளவுதான் தீங்கு செய்தாலும் அல்லது வரையாது ஒழுகினாலும் தலைவியின் மனதில் மிகச் சிறந்தவனாகவே காட்டப்படுகின்றாள். இவ்வாறு தலைவனிடத்தில் தலைவி கொண்ட நட்பானது அவள் அன்பின் மேன்மையை உறுதி செய்கின்றது (Swaminatha Iyer, 1983).

## தோழியின் உறவு

அகத்திணை ஒழுக்கத்தில் தோழிக்கென்று தனியான சிறப்பிடம் உண்டு. அகமாந்தர்களை இணைக்கும் பாலமாகத் தோழியே காணப்படுகின்றாள். தலைமக்களின் காதல் வாழ்க்கையில் பங்கு கொண்டு தலைவிக்கு அரணாக நின்று காப்பவளாகத் தோழி விளங்குகின்றாள். அகத்திணை மாந்தர்களுள், தலைமக்களுக்கான இல்லற வாழ்வில் மிகப் பெரிய பொறுப்பினை உடையவளாகவும், தலைவியுடன் ஒன்றிய நெஞ்சத்தாளாகவும் தோழி விளங்குகின்றாள்.

குறுந்தொகையில் இடம்பெறும் பல பகுதிகளில் தோழியின் ஆட்சி மிக இன்றியமையாத நிலையில் அமைந்துள்ளன. களவு, கற்பு எனற இரு வகை நிலையிலும் பங்கேற்று ஆட்சிபுரிபவளாக விளங்குகின்றாள் தோழி.

தலைவியின் களவுக் காலம் முதற்கொண்டு அறத்தோடு நிற்கும் நிலை வரையிலும் எல்லா நிலைகளிலும் தோழியின் பங்கு அளவிடற்கரியது.

களவு வாழ்க்கையில் தலைவியின் உடல் வேறுபாடு கண்ட தாய் முதலியோர் வெறியாட்டு எடுக்கின்றனர். இந்நிலையில் தோழி அறத்தோடு நின்று தாய் முதலியோரிடத்தில் தலைவியின் களவு வாழ்க்கையைத் தோழி வெளிப்படுத்துகிறார். இதைப்போல் தலைவியின் காதல் வாழ்க்கையில் இற்செறிப்பும் காப்பும் மிகும் பொழுது உடன்போக்கு நிகழ்கிறது. தலைவி தலைவனுடன் செல்வதற்குத் தகும் என உணர்ந்த தோழி அதனைத் தலைவிக்கு உணர்த்தியதாகப் பாலை பாடிய பெருங்கடுங்கோ பாடல் அமைகிறது.

"ஊஉ ரலரெழச் சேரி கல்லென

ஆனா தலைக்கம் அறனி லன்னை."

தலைவி தன்னைப் பெற்று வளர்த்த தாய், தான் அறத்தோடு நின்ற பொழுது இசையவில்லை என்று உடன்போக்கு மேற்கொண்டாள். இவள் தாயை அறனில்லாதவள் என்கிறாள். விரும்பிய தலைவனை மணக்க விடுவதே அறனாகும். அதற்கு இணங்காமை அறனற்ற செயலாகும் (Swaminatha Iyer, 1983).

கற்பின்கண் தலைவனிடத்தில் ஊடல் கொண்டிருப்பாள் தலைவி. அவர்களின் ஊடலைத் தீர்த்து வைக்கும் வாயிலாகத் தோழி செயல்படும் பாடல்கள் குறுந்தொகையில் காணப்படுகிறது.

## பாங்கனின் உறவுநிலை

தலைவிக்குத் தோழி எவ்வாறு உற்ற துணைபுரிகின்றாரோ அது போலவே, தலைவனுக்குப் பாங்கன் தோழனாக அமைகின்றான். அக இலக்கியங்களில் பாங்கன் 'இடிக்கும் கேளிர்' எனவும் 'சிறாஅர மறு நண்பன்' எனவும், 'புலவர் தோழன்' எனவும் பாராட்டப்படுகிறான். தலைவனது செயல்பாடுகளை உற்று நோக்கும் பாங்கன் அவனுக்கு அறிவிப்பாளனாகப் பயன்படுவதோடு மட்டுமல்லாமல் அறிவுறுத்துபவளாகவும் விளங்குகிறான். பாங்கனின் தன்மையைக் குறித்துத் தொல்காப்பியனார்,

"மொழிஎதிர் மொழிதல் பாங்கற் குரித்தே"

பாங்கன் களவுக் காலத்துக் கூற்றும், கற்புக் காலத்தில் தலைவனின் பரத்தையர் பிரிவிற்கு உடன்படாது ஒழுகும் தன்மையைக் கொண்டிருப்பவனாகவும் குறுந்தொகையில் படைக்கப்பட்டுள்ளான் (Natchinarkkiniyar, 1950).

பாங்கன் தலைவனை பல இடங்களில் நெறிப்படுத்தும் ஆற்றல் உடையவனாகக் காட்டப் பெறுகிறான். தலைவனைப் பாங்கன் இடித்துக் கூறியவிடத்துத் தலைவன் அவனிடம் 'தனது காமநோய் பொறுத்துக் கொள்ள முடியாத நிலையைக் கொடுத்தது' என்று கெஞ்சி நிற்கின்ற நிலையைக் குறுந்தொகையில் காண முடிகிறது.

"இடிக்கும் கேளிர் நுங்குறை ஆக"

என்ற இப்பாடலில் பாங்கனைத் தலைவன் 'இடிக்குங் கேளிர்' என்று சுட்டுகிறான். 'இடிக்குந் துணையார்' என்றும் 'மேற்சென்று இடித்தாற் பொருட்டு' என்றும் வள்ளுவரும் காட்டுவார் (Swaminatha Iyer, 1983).

## பரத்தையர் உறவுநிலை

பரத்தையர் பற்றி இளம்பூரணர் தம் தொல்காப்பியக் கற்பியலில் இற்பரத்தையர், காதற் பரத்தையர் என இரு வகையினராக வளைப்படுத்துகிறார். குறுந்தொகைப் பாடல் ஒன்றில் தலைவி தன்னை இகழ்ந்து கூறினால் என்பதை அறிந்து உடனே அக்காதற்பரத்தை தலைவி பக்கத்தில் உள்ளோர் கேட்கும்படி தலைவன் எனக்கு வயப்பட்டவன் போல தங்கி என் மனம் போல் ஒழுகினான. அதனால் தருக்குற்ற தலைவி என்னை இகழ்கிறாள் என்று கூறுகிறாள்.

"கையும் காலும் தூக்கத் தூக்கும்

ஆடிப்பாவை போல

மேவன செய்யுந்தன் புதல்வன் தாய்க்கே"

இப்பாடலில் தலைவியைத் 'தாம் புதல்வனின் தாய்' என்று குறிப்பிடுகிறாள் பரத்தை. இவ்வாறு பரத்தை கொண்ட உறவுநிலை நன்கு தெரிகின்றது (Swaminatha Iyer, 1983).

## செவிலி - நற்றாய் உறவு

அகத்திணை மாந்தர்களுள், நற்றாய் தலைவியைப் பெற்ற தாயாவாள். தலைவியும் தோழியும் எவ்வாறு மன ஒருமைப்பாடு உடையவராகக் காணப்படுகின்றனரோ அதைப் போலவே நற்றாய்க்கும் செவிலிக்கும் இடையே ஒருமைப்பாடு உடையவராக விளங்குகின்றனர். தலைமக்களின் களவு வாழ்க்கையில் நற்றாய்க்கும் கூற்று நிகழ்வதாகத் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. ஆனால் செவிலிக்கோ பதின்மூன்று இடங்களில் கூற்று நிகழும் என்று குறிப்பர். தலைவியின் களவு நெறியில் செவிலி ஆற்றும் பங்கு தனிச் சிறப்பானதாகும்.

"பாலும் உண்ணாள் பந்துடன் மேவாள்

விளையாட்டு ஆயமொடு அயர்வோ ளினியே"

தலைவி தன் ஆயத்தாரோடு இடைவிடாது விளையாடும் பூப்பந்தையும் விருப்பத்தோடு உண்ணும் பாலையும் விரும்பாதவளாய் தலைவனுடன் செல்லத் துணிந்து விட்டாள். இச்சூழலில் தலைவியைப் பிரிந்ததில் துன்பமும் தன் காதலனுடன் கற்பு மணம் புரியும் இன்பமும் நினைப்பவளாகச் செவிலி விளங்குகிறாள் (Swaminatha Iyer, 1983).

## முடிவுரை

குறுந்தொகையில் அகமாந்தர் உறவுநிலை என்ற இயலில் அகமாந்தர்களின் தன்மைகள் அவர்களின் உறவுநிலை போன்றன பற்றி விளக்கப்பட்டுள்ளன. குறுந்தொகையில் தலைவிக்கு உறவுடையோராக நற்றாய், செவிலி, தோழி முதலியோர் படைக்கப்பட்டிருக்கின்றனர். தலைவனுக்கு இவ்வாறு உறவுடைய நிலையில் அமையாமல் நட்பொழுக்கத்தின் அடிப்படையில் பாங்கனும், தொடர்புடைய நிலையில் பரத்தையும் அமைந்துள்ளனர். அகமாந்தர்களின் தனித்திறன்களையும் கருத்துக்களையும் பற்றி இக்கட்டுரையில் காணப்படுகின்றன.

## References

Ilampooranar, (1967) Tholkappiyam Porulathigaram, Tamil university, Thanjavur, India.

Natchinarkkiniyar, (1950) Tholkappiyam Porulathigaram, Gowra Puthaga Maiyam, Chennai, India.

Swaminatha Iyer, U. V., (1983) Kurundhogai Moolamum Uraiyum, Annamalai university, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License